**<u>சார்பு நீதிமன்றம், சங்ககிரி</u>**

**<u>MCOP No.844/2011</u>**

ம.சா.4

நாள்: **16.07.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | **மணிகண்டன்** | மதம்: | |
| தகப்பனார்/கணவர் பெயர்: | வெங்கடாசலம் | ஜாதி: | |
| கிராமம்: | | வேலை: | |
| வட்டம்: | | வயது: | |

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16-ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.4 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் MCOP No.892/2011 மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் கண்டுள்ள சான்றாவணங்கள் பட்டியலில் உள்ள வரிசை எண்.1 முதல் 10 வரையான ஆவணங்கள் முறையே ம.சா.ஆ.17 முதல் ம.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தின்போது நான் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து பயணம் செய்தேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தை ரங்கசாமி என்பவர் ஓட்டினார். என்னுடன் கொண்டன், மஞ்சு ஆகியோரும் அமர்ந்து பயணம் செய்தோம் என்றால் சரிதான். நாங்கள் பயணம் செய்த வாகனம் TVS Star City என்றால் சரிதான். 2 பேர் செல்லக்கூடிய வாகனத்தில் 4 நபர்கள் பயணம் செய்த காரணத்தால் கட்டுபடுத்த முடியாமல் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.

ரங்கசாமி நாங்கள் சென்ற வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்றதால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் 30.09.2011 ல் கடைசியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேன். எனக்கு விபத்தினால் வலது கை மற்றும் வலது கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. முதல் விசாரணையில் எனக்கு இடது கால் எலும்பு முறிவு ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் அது பொய். அதேபோல் நான் தற்போது வரை ஊன்றுகோல் உதவியுடன் தான் நடப்பதாக சொல்லியிருந்தால் அதுவும் பொய். எனக்கு நான் உதவியாளர் வைத்திருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஊட்டச்சத்திற்கும், மருந்து மாத்திரைக்கும் ரூ.1,50,000/- செலவானதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் தற்போது தனியார் நிதி நிறுவனத்தில் அலுவலராக வேலைசெய்கிறேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரண குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம், வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- மணிகண்டன்

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.